# தூத்துக்குடி மாநகராட்சி

## கூட்டப்பொருள்

2019ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

<table>
<tr>
<td>31.07.2019</td>
<td>
1) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “ சீர்மிகு நகரம் (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட“ சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAIL) எண்.112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br><br>
அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட், அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 05–10 நாள் 12.07.2019இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணிகளின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>Proposed Centralized SCADA system demand driven – Water Supply & Distribution Management System for the Thoothukudi City Municipal Corporation Water Supply Improvement Scheme.</td><td>920.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>920.00</td></tr>
</table>
<br>
எனவே தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் குடிநீர் மேற்பார்வை மற்றும் தரவு கையகப்படுத்துதல் (Supervisory control and Data Acquisition) முறையில் பணிகளை ரூ. 920.00 லட்சம் மதிப்பீட்டில் ஸ்மார் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணையை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
E1/03209/2015
</td>
<td>137)அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
2) மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள “ சீர்மிகு நகரம் (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட“ சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண் (MAIL) எண்.112 நாள் 31.07.2015ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br>
அதன்பேரில் தலைவர், தூத்துக்குடி ஸ்மார்ட் சிட்டி லிமிட்டெட், அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 05–10 நாள் 12.07.2019இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.<br>
<table>
<tr><th>வ.எண்</th><th>பணிகளின் பெயர்</th><th>மதிப்பீட்டுத் தொகை (ரூ. லட்சத்தில்)</th></tr>
<tr><td>1</td><td>தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான வடக்கு கடற்கரை சாலையில் உள்ள முத்துநகர் கடற்கரை பூங்கா அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல்..</td><td>445.00</td></tr>
<tr><td></td><td>மொத்தம்</td><td>445.00</td></tr>
</table>
எனவே தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான முத்துநகர் கடற்கரை பூங்கா அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட ரூ. 445.00லட்சம் மதிப்பீட்டில் ஸ்மார் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணையை சமர்ப்பிக்கவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக் குறிப்பு : மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>
E1/03209/2015(MNP)
</td>
<td>138) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
3) இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்களின் கீழ் மாமன்றத் தீர்மானம் எண் 131 நாள் 01.07.2019 அனுமதிக்கப்பட்ட 16 இனங்களுக்கு 15.07.2019ல் பொது ஏலம் நடத்தப்பட்டதிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிலும் கீழ்க்கண்ட விபரப்படி மாநகராட்சி மூலம் அதிகப்பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டதில் கீழ்க்கண்ட 9 இனங்கள் மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு மேல் ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>வரிசை எண் 02</u><br>
எஸ்.எஸ் தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.
</td>
<td>139) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது.</td>
</tr>
</table>

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. சுந்தர ராஜ்குமார், 160E/18/1D குறிஞ்சி நகர் –5வது தெரு, தூத்துக்குடி –2 | 2,26,051 | 2,54,500 |
| 2 | திரு. லிவிங்ஸ்டன், 8/57 சோட்டையன் தொப்பு (வடக்கு) ஆரோக்கியபுரம், தூத்துக்குடி. | | 2,10,000 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சுந்தர ராஜ் குமார் என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.40,000/– (நாற்பதாயிரம்) தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, வரவோலை எண் 080514, நாள் – 11–07–2019, இணைத்து உரிமைத்தொகை ரூ.2,54,500 (இரண்டு லட்சத்து ஐம்பத்து நான்கு ஆயிரத்து ஐந்நூறு) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.லிவிங்ஸ்டன் என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ. 40,000/– (நாற்பதாயிரம்) தமிழ்நாடு மெர்கன்டைல் வங்கி, வரவோலை எண் – 080515, நாள் – 11 –07–2019 இணைத்து உரிமைத் தொகை ரூ. 2,10,000 (இரண்டு லட்சத்து பத்தாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சுந்தரராஜ் என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. லிவிங்ஸ்டன், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

<u>வரிசை எண் 03</u>

சிதம்பரநகர் மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. முருகவேல், 640, P&Tகாலனி –13வது தெரு, தூத்துக்குடி. | 5,55,660 | 5,20,000 |
| 2. | திரு. திருமணிராஜா, 11 D,முனியசாமிபுரம், தூத்துக்குடி | | 6,40,000 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.முருகவேல் என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.1,00,000/– (ஒரு லட்சம்) விஜயா வங்கி, வரவோலை எண் 835108, நாள் 11–07–19, இணைத்து உரிமைத் தொகை ரூ.5,20,000/– (ஐந்து லட்சத்து இருபதாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. திருமணிராஜா, என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.1,00,000/– (ஒரு லட்சம்) விஜயா வங்கி, வரவோலை எண் 835107, நாள் 11–07–19, இணைத்து உரிமைத் தொகை ரூ.6,40,000/– (ஆறு லட்சத்து நாற்பதாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. திருமணிராஜா என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. முருகவேல், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

**வரிசை எண் 04**

கோபால்சாமி தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. கோபால்,<br>39,தச்சர் தெரு,<br>தூத்துக்குடி. | 2,75,735 | 2,95,000 |
| 2. | திரு. வேல்ராஜ்,<br>1993,கீழ அழகாபுரி,<br>தாளமுத்துநகர்,<br>தூத்துக்குடி. | | 3,17,700 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கோபால் என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.50,000/– (ஐம்பதாயிரம்) சென்ரல் பங்க் ஆப் இந்தியா, வரவோலை எண் 140261, நாள் 12–07–19, இணைத்து உரிமைத் தொகை ரூ.2,95,000/– (இரண்டு லட்சத்து தொண்ணுற்று ஐந்தாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. வேல்ராஜ், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.50,000/– (ஐம்பதாயிரம்) சென்ரல் பங்க் ஆப் இந்தியா, வரவோலை எண் 140260, நாள் 12–07–19, இணைத்து உரிமைத் தொகை ரூ.3,17,700/– (மூன்று லட்சத்து பதினெழாயிரத்து எழுனூறு) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.வேல்ராஜ், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. கோபால், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

**வரிசை எண் 5**

தச்சர் தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. அலெக்ஸ் ஆபிரகாம், 81/86 முத்து கிருஷ்ணாபுரம், தூத்துக்குடி. | 55,676 | 64,500 |
| 2. | திரு.லிவிங்ஸ்டன், 8/57, வடக்கு சோட்டையன் தோப்பு, ஆரோக்கியபுரம், தூத்துக்குடி. | | 64,200 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அலெக்ஸ் ஆபிரகாம், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.10,000/– (பத்தாயிரம்) தமிழ்நாடு மெர்கன்டல் வங்கி, வரவோலை எண் 053352, நாள் 11–07–19, இணைத்து உரிமைத் தொகை ரூ.64,500/– (ஆறுபத்து நான்காயிரத்து ஐந்நூறு) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.லிவிங்ஸ்டன் என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.10,000/– (பத்தாயிரம்) தமிழ்நாடு மெர்கன்டல் வங்கி, வரவோலை எண் 080520, நாள் 11–07–19, இணைத்து உரிமைத் தொகை ரூ.64,200/– (ஆறுபத்து நான்காயிரத்து இருநூறு) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. அலெக்ஸ் ஆபிரகாம்,, என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. லிவிங்ஸ்டன், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

**வரிசை எண் 9**

மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் தானாக இயங்கும் ஒன்று நிறுவிக் கொள்ளும் உரிமத்திற்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. ராஜா, தாமோதர நகர், தூத்துக்குடி. | 8930 | 10,000 |
| 2. | திரு.வேலு, டூவிபுரம் –3வது தெரு, தூத்துக்குடி. | | 7,900 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ராஜா, என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.1,600/– (ஆயிரத்து ஆநூறு ) பங்க் ஆப் இந்தியா, வரவோலை எண் 657550, நாள் 12–07–19, இணைத்து உரிமைத் தொகை,ரூ.10,000/– (பத்தாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.வேலு, என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.1,600/– (ஆயிரத்து ஆநூறு )பங்க் ஆப் இந்தியா, வரவோலை எண் 657549, நாள் 12–07–19, இணைத்து உரிமைத் தொகை ரூ.7,900/– (எழாயிரத்து தொள்ளாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ராஜா என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு.வேலு, என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

**வரிசை எண் 11**

மாநகராட்சி பகுதியில் மாடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.லிவிங்ஸ்டன், 8/57,ஆரோக்கியபுரம், தூத்துக்குடி. | 1,11,353 | 90,000 |
| 2. | திரு.பால கணேஷ், 2/302 அன்னை கொயர் தெரு, கோரம்பள்ளம், தூத்துக்குடி. | | 1,28,500 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.லிவிங்ஸ்டன், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.20,000/– (இருபதாயிரம்) இந்தியன்பங்க், வரவோலை எண் 860487, நாள்12–07–19, இணைத்து உரிமைத் தொகை,ரூ. 90,000/– (தொண்ணூறு ஆயிரம் )என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பால கணேஷ் என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.20,000/– (இருபதாயிரம்) இந்தியன்பங்க், வரவோலை எண் 860486, நாள்12–07–19, இணைத்து உரிமைத் தொகை,ரூ. 1,28,500/– (ஒரு லட்சத்து இருபத்தி எட்டாயிரத்து ஐந்நூறு)என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பால கணேஷ், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. லிவிங்ஸ்டன், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

**வரிசை எண் 12**

மாநகராட்சி புதியபேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி பகுதியில் ஆடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.. (வார்டு எண் 1 முதல் 7 வரை, 34 முதல் 39 வரை, 41 முதல் 44 வரை,மற்றும் 46 முதல் 49 வரை).

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.பிரேம் ஆதித்தன், குறிஞ்சி நகர் – 2ம் தெரு, தூத்துக்குடி. | 3,30,860 | 3,80,800 |
| 2. | திரு.ராஜ் குமார், 63, வடக்கு வாணியன் விளை, தூத்துக்குடி. | | 2,90,000 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பிரேம் ஆதித்தன், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.60,000/– (ஆறுபதாயிரம்) தமிழ்நாடு மெர்கன்டைல் பங்க், வரவோலை எண் 053354, நாள்12–07–19, இணைத்து உரிமைத் தொகை,ரூ. 3,80,800/– (மூன்று லட்சத்து எண்பதாயிரத்து எண்ணூறு )என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. .ராஜ் குமார், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.60,000/– (ஆறுபதாயிரம்) தமிழ்நாடு மெர்கன்டைல் பங்க், வரவோலை எண் 053355, நாள்12–07–19, இணைத்து உரிமைத் தொகை,ரூ. 2,90,000/– (இரண்டு லட்சத்து தொண்ணூறாயிரம் ) என ஒப்பந்தப்புள்ளியில்

தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பிரேம் ஆதித்தன், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. ராஜ் குமார், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

<u>வரிசை எண் 13</u>

மாநகராட்சி புதியபேருந்து நிலையம் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் தொலைகாட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.சுந்தர ராஜ் குமார், 160இ/18/1 டி குறிஞ்சி நகர் – 5வது தெரு, தூத்துக்குடி. | 2,20,610 | 2,53,750 |
| 2. | திரு.லிவிங்ஸ்டன், ஆரோக்கியபுரம்,, தூத்துக்குடி. | | 1,25,000 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சுந்தர ராஜ்குமார், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.40000/– (நாற்பதாயிரம்) தமிழ்நாடு மெர்கன்டைல் பங்க், வரவோலை எண் 080513, நாள்11–07–19, இணைத்து உரிமைத்தொகை,ரூ.2,53,750/– இரண்டு லட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து எழனூற்றி ஐம்பது)என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. திரு.லிவிங்ஸ்டன், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.40000/– (நாற்பதாயிரம்) தமிழ்நாடு மெர்கன்டைல் பங்க், வரவோலை எண் 080516, நாள்11–07–19, இணைத்து உரிமைத் தொகை,ரூ.1,25,000 /– (ஒரு லட்சத்து இருபத்தந்தாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சுந்தர ராஜ் குமார், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. லிவிங்ஸ்டன், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

**வரிசை எண் 15**

வல்லநாடு நீரேற்று நிலையத்தில் உள்ள பலன் தரும் மரங்களின் மகசூல் அனுபவிக்கும் உரிமத்திற்கு கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு.லிவிங்ஸ்டன், 8/57, வடக்கு சோட்டையன் தோப்பு, ஆரோக்கியபுரம்,, தூத்துக்குடி. | 7097 | 7,000 |
| 2. | திரு. முருகவேல், 640 P&Tகாலனி –13வது தெரு, தூத்துக்குடி. | | 12,000 |

1 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. லிவிங்ஸ்டன், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.1000/– (ஆயிரம்) பங்க் ஆப் இந்தியா, வரவோலை எண் 657551, நாள்12–07–19, இணைத்து உரிமைத் தொகை,ரூ.7,000/–(ஏழாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

2 வது ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. முருகவேல், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகை ரூ.1000/– (ஆயிரம்) பங்க் ஆப் இந்தியா, வரவோலை எண் 657552, நாள்12–07–19, இணைத்து உரிமைத் தொகை,ரூ.12,000/–(பன்னிரெண்டாயிரம்) என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சுந்தர ராஜ் குமார், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. லிவிங்ஸ்டன், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

<u>அலுவலக குறிப்பு</u>

இம்மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2,3,4,5,9,11,12,13,15 ஏல இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி தொகை கூடுதலாக வரப்பெற்றுள்ளதால் ,மாமன்றம் ஏற்று 1.08.2019 முதல் 31.07.2019ம் ஆண்டிற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின் நிபந்தனைகளுக்குட்பட்டுத்தி உரிம இனங்களை ஒப்படைக்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.அ16/0029/2018

| | | |
|---|---|---|
| | 4)இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்களின் கீழ் மாமன்றத் தீர்மானம் எண் 131 நாள் 01.07.2019 அனுமதிக்கப்பட்ட 16 இனங்களுக்கு 15.07.2019ல் பொது ஏலம் நடத்தப்பட்டதிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிலும் கீழ்க்கண்ட விபரப்படி மாநகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டதில் ,அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 140) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|---|
| 1. | திருமதி.சுதா ,<br>18, டுவிபுரம் –3வது தெரு,<br>தூத்துக்குடி. | 9,93,353 | 11,42,500 |
| 2. | திரு.வேலு,<br>டுவிபுரம் –3வது தெரு,<br>தூத்துக்குடி. | | 9,85,000 |

2013–2016 மூன்றாண்டு குத்தகை தொகையாக ஆண்டிற்கு ரூ.7,05,000/– ம் 2016–2019 மூன்றாண்டு குத்தகை தொகையான ஆண்டு ஒன்றிற்கு ரூ.9,93,353/– மாநகராட்சிக்கு வரவு வரப்பெற்றுள்ளது. தற்போது 2019–2022 மூன்றாண்டு குத்தகை தொகை உயர்ந்தபட்சமாக ரூ.11,42,500/– என திருமதி. சுதா என்பவர், தனக்கு குத்தகைக்கு வழங்க கோரியுள்ளார்.

மேற்படி தொகையானது, சந்தை மதிப்பிலிருந்து எவ்வாறு வேறுப்பட்டுள்ளது. என்பதை ஆராயவும், மேற்படி தொகைக்கு வழங்குவது மாநகராட்சி நிதியிழப்பை ஏற்படுத்துமா என்பது குறித்து, சந்தை விலை விவரங்களை அடிப்படையில் ஆய்வு செய்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மாநகராட்சி உதவி ஆணையர் (வருவாய் (பொ) , உதவி வருவாய் அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் (சிறப்பு) , மண்டல உதவி ஆணையர்கள், மற்றும் உதவி பொறியாளர்கள் ஆகியோர் அடங்கிய குழுவின் அறிக்கையானது, ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களுக்கு சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி குழுவின் அறிக்கையில், மாநகராட்சி அறிஞர் அண்ணா திருமண மண்டபம், பொது மக்களுக்கு திருமண சுப முகூர்த்த நிகழ்ச்சிகள் ரூ.40,000/– வீதம் நிகழ்ச்சி ஒன்றுக்கு வசூல் செய்ப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு குறைந்தது 52 சுப முகூர்த்தங்கள் உள்ளன. இதில் சுப முகூர்த்த நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் , ரூ. 20,80,000/– குத்தகைகாரருக்கு கிடைப்பதுடன், இதர சிறு நிகழ்ச்சிகள், குடும்ப நிகழ்ச்சிகள் வாயிலாக, மேலும் 25 நாட்கள் மண்டபம் பதிவாக வாய்ப்புள்ளது. எனவே, ஒரு வருடத்திற்கு தோராயமாக ரூ. 25,00,000/– வரை ஒப்பந்ததாரருக்கு வருமானம் கிடைக்கும் என்பது அருகில் உள்ள திருமண மண்டபங்களின் முன் பதிவுகளை ஆராயும் போது தெரிய வருகிறது. மேலும் மாநகராட்சி திருமண மண்டபமானது இதர தனியார் திருமண மண்டபங்களை காட்டிலும், குடியிருப்பு சூழ்ந்த அமைதியான பகுதியில் அமைந்துள்ளதுடன், திருமண நிகழ்ச்சிக்கு எத்தகைய வாகனங்கள் மற்றும் பெருந்திரள் கூட்டம் வந்தாலும் போக்குவரத்து நெரிசலின்றி எளிதில் மக்கள் வந்தும் செல்லும் வகையில் சாலை வசதிகளுடன் கூடிய சிறப்பு அம்சங்களுடன் இருப்பதாலும் மேலும், மேற்படி மண்டபத்தில் வர்ணம் பூசுதல், பராமரிப்பு பணிகளுடன் குளிர்சாதன வசதியும் அமைக்கும் பட்சத்தில் கூடுதல் வாடகையுடன், அதிக எண்ணிக்கையிலான முன்பதிவுகளுடன் அதிக வருவாய் ஈட்ட வாய்ப்புள்ளது. மேலும், அண்ணா மண்டபத்தினை சுற்றியுள்ள ஏனைய மண்டபங்களில் (அபிராமி மஹால், ஏ.வி.ம் மஹால், ராணி மஹால், கனி பேலஸ் போன்றவைகள்) குறைந்தது ஒரு நிகழ்ச்சிக்கு ரூ.75,000/– வீதம் பெறப்பட்டு வருகிறது.

எனவே, அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தை மாநகராட்சி மூலம் மராமரத்து பணிகள் செய்து முற்றிலும், குளிருட்டப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்கு மாநகராட்சி மூலம் செயல்படுத்தினால், மாநகராட்சி கூடுதல் வருமானம் வர வாய்ப்புள்ளது. மேலும், பொது மக்கள் மத்தியில் மாநகராட்சிக்கு நற்பெயர் ஏற்படும். மேலும், தூத்துக்குடி மாநகரப் பகுதியில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பல்வேறு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருவதால், இம்மண்டபத்தினையும் நவீன வசதிகளுடன் மாநகராட்சி மூலம் பராமரித்து வர மாமன்றம் ஒப்புதல் பெறலாம். எனவே, 1.08.2019 முதல் மாநகராட்சி மூலம் பராமரிக்க நடவடிக்கை எடுக்க ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனமானது மாநகராட்சி மூலம் பொதுமராமத்து மேம்படுத்தும் பணி மற்றும் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று, புதிதாக கணினி மூலம் கட்டணம் வசூல் செய்ய உள்ளதால், ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்து, இம்மாநகராட்சியால் பராமரிக்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.அ16/0029/2019

| | | |
|---|---|---|
| | 5)இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்களின் கீழ் மாமன்றத் தீர்மானம் எண் 131 நாள் 01.07.2019 அனுமதிக்கப்பட்ட 16 இனங்களுக்கு 15.07.2019ல் பொது ஏலம் நடத்தப்பட்டதிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிலும் கீழ்க்கண்ட விபரப்படி மாநகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டதில் ,இராஜாஜி பூங்கா அருகில் இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 141) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப் பட்டது. |

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.லிவிங்ஸ்டன், 8/57, வடக்கு சோட்டையன் தோப்பு, ஆரோக்கியபுரம், தூத்துக்குடி. | 1,27,421 | 1,05,000 |
| 2. | திரு.ஜமாலுதீன் ரபீத், 80 பி, நந்த கோபாலபுரம் (மேற்கு) தூத்துக்குடி. | | 1,27,800 |

2016–2019 மூன்றாண்டு குத்தகை தொகையான ஆண்டு ஒன்றிற்கு ரூ.1,27,421/– மாநகராட்சிக்கு வரவு வரப்பெற்றுள்ளது. தற்போது 2019–2022 மூன்றாண்டு குத்தகை தொகை உயர்ந்தபட்சமாக ரூ.1,27,800/– என திரு. ஜமாலுதீன் ரபீத் என்பவர், தனக்கு குத்தகைக்கு வழங்க கோரியுள்ளார்.

மேற்படி தொகையானது, சந்தை மதிப்பிலிருந்து எவ்வாறு வேறுப்பட்டுள்ளது. என்பதை ஆராயவும், மேற்படி தொகைக்கு வழங்குவது மாநகராட்சி நிதியிழப்பை ஏற்படுத்துமா என்பது குறித்து, சந்தை விலை விவரங்களை அடிப்படையில் ஆய்வு செய்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி, மாநகராட்சி உதவி ஆணையர் (வருவாய் (பொ) , உதவி வருவாய் அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் (சிறப்பு) , மண்டல உதவி ஆணையர்கள், மற்றும் உதவி பொறியாளர்கள் ஆகியோர் அடங்கிய குழுவின் அறிக்கையானது, ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களுக்கு சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது.

மாநகராட்சி இராஜாஜி பூங்கா அருகில் அமைந்துள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடமானது அரசு மருத்துவ கல்லூரி மருத்துமனையின் நுழைவு வாயில் பகுதியாகும். மேற்படி இடத்தில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சாலையின் வழியாகத்தான், பொதுமக்கள், நோயாளிகள், அவசரகால வாகனங்கள், மருத்துவமனை ஊழியர்கள் என பெரும்பாலானோர் பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி பகுதியானது எப்பொழுதும் பரபரப்பாக காணப்படுகிறது. இந்நிலையில், மேற்படி பகுதியில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடங்களில், மாநகராட்சி அமனுமதியின்றி சிறு சிறு கடைகள் உருவாகி போக்குவரத்திற்கு மேலும், இடையூராக அமைந்துள்ளது. எனவே, இதனை ஒழுங்குபடுத்தும் வகையிலும், மாநகராட்சிக்கு பெருமளவில் நிதி ஆதாரம் உருவாகும் வகையிலும் மேற்படி பகுதியின் தரை தளத்தில் கடைகள் , முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடமாக அடுக்குமாடி கட்டிடம் கட்டும் நிலையில் மேற்படி இடமானது பொது மக்களுக்கும், வாகன ஒட்டிகளுக்கும் பயனுள்ளதாக அமையும். மேலும், பொது மக்கள் மத்தியில் மாநகராட்சிக்கு நற்பெயர் ஏற்படும். எனவே,மேற்படி இராஜாஜி பூங்கா அருகில் இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தினை, 01.08.2019 முதல் மாநகராட்சி மூலம் பராமரித்து கட்டணம் வசூலித்திட நடவடிக்கை எடுக்க ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

<u>அலுவலக குறிப்பு</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனமானது மாநகராட்சி மூலம் பொதுமராமத்து மேம்படுத்தும் பணி மற்றும் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று, புதிதாக கணினி மூலம் கட்டணம் வசூல் செய்ய உள்ளதால், ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்து, இம்மாநகராட்சியால் பராமரிக்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.அ16/0029/2019

| | | |
|---|---|---|
| | 6) இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்களின் கீழ் மாமன்றத் தீர்மானம் எண் 131 நாள் 01.07.2019 அனுமதிக்கப்பட்ட 16 இனங்களுக்கு 15.07.2019ல் பொது ஏலம் நடத்தப்பட்டதிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிலும் கீழ்க்கண்ட விபரப்படி மாநகராட்சி மூலம் ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டதில் , புதிய பேருந்து நிலையத்தினுள் சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.<br>தூத்துக்குடி மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தினுள் சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், மூன்றாண்டு குத்தகை இனமாக மாநகராட்சி மூலம் பொது மக்கள் பயன்பாட்டிற்கு பயன்பட்டு வந்தது. | 142) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|---|
| 1. | திரு. முருகவேல்,<br>640 P&Tகாலனி –13வது தெரு,<br>தூத்துக்குடி. | 7,17,176 | 5,25,000 |
| 2. | திரு.விஜயன்,<br>71,அழகேசபுரம்,<br>தூத்துக்குடி. | | 8,24,950 |

2016–2019 மூன்றாண்டு குத்தகை தொகையான ஆண்டு ஒன்றிற்கு ரூ.7,17,176/– மாநகராட்சிக்கு வரவு வரப்பெற்றுள்ளது. தற்போது 2019–2022 மூன்றாண்டு குத்தகை தொகை உயர்ந்தபட்சமாக ரூ.8,24,950/– என திரு. கே,கே,பி, விஜயன் என்பவர், தனக்கு குத்தகைக்கு வழங்க கோரியுள்ளார்.

மேற்படி தொகையானது, சந்தை மதிப்பிலிருந்து எவ்வாறு வேறுப்பட்டுள்ளது. என்பதை ஆராயவும், மேற்படி தொகைக்கு வழங்குவது மாநகராட்சி நிதியிழப்பை ஏற்படுத்துமா என்பது குறித்து, சந்தை விலை விவரங்களை அடிப்படையில் ஆய்வு செய்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டதன் பேரில், மாநகராட்சி உதவி ஆணையர் (வருவாய் (பொ) , உதவி வருவாய் அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர்கள் (சிறப்பு) , மண்டல உதவி ஆணையர்கள், மற்றும் உதவி பொறியாளர்கள் ஆகியோர் அடங்கிய குழுவின் அறிக்கையானது, ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களுக்கு சமர்ப்பித்துக் கொள்ளப்படுகிறது.

மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தினுள் அமைந்துள்ள சைக்கிள் நிறுத்தும் இடமானது ,

பேருந்துகள் வெளியே செல்லும் பகுதியில் அமைந்துள்ளதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதுடன் அவ்வப்போது விபத்துகளும் ஏற்படுகிறது. மேலும், மேற்படி சைக்கிள் நிறுத்தும் இடமானது மிகவும் குறுகிய பகுதியாக அமைந்துள்ளதால் வாகன ஒட்டிகள் வாகனத்தை முறையாக நிறுத்துவதிலும், சிரமத்திற்கு உள்ளாவது நேரடி ஆய்வில் தெரிய வருகிறது. எனவே, மேற்படி சிறிய இடத்தில் முன் பகுதியில் போதுமான இடைவெளி விட்டு, அடுக்குமாடி கட்டிடமாக அமைத்து முற்றிலும் நவீனமயமாக,சீர் மிகு நகர திட்டத்தின் கீழ், மேம்படுத்தும் பணிகள் மூலம் கணினிகள் மூலம் வசூல் செய்வதால் பொது மக்கள் பயன்பெறுவார்கள். மேலும், மாநகராட்சிக்கு கூடுதல் வருமானம் வர இயலும். எனவே, புதிய பேருந்து நிலையத்தில் பொது மக்கள் எளிதாக வந்து செல்லும் வகையில்,அடுக்கு மாடி கட்டிடம் அமைத்து மாநகராட்சி மூலம் கட்டணம் வசூல் செய்திடவும், **01.08.2019** முதல் மாநகராட்சி மூலம் பராமரிக்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனமானது மாநகராட்சி மூலம் பொதுமராமத்து மேம்படுத்தும் பணி மற்றும் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று, புதிதாக கணினி மூலம் கட்டணம் வசூல் செய்ய உள்ளதால், ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்து, இம்மாநகராட்சியால் பராமரிக்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.அ16/0029/2019

| | | |
|---|---|---|
| | 7)இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட குத்தகை இனங்களின் கீழ் மாமன்றத் தீர்மானம் எண் 131 நாள் 01.07.2019 அனுமதிக்கப்பட்ட 16 இனங்களுக்கு 15.07.2019ல் பொது ஏலம் நடத்தப்பட்டதிலும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதிலும் கீழ்க்கண்ட விபரப்படி மாநகராட்சி மூலம் அதிகப்பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டதில் கீழ்க்கண்ட 4 இனங்கள் மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்ட தொகைக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை கோரப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><u>**வரிசை எண் 01**</u><br>விக்டோரியா தொடர் சாலையில் உள்ள வ.உ.சிதம்பரம் மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூல் செய்தல் மற்றும் மீன் சந்தை வியாபாரிகளுக்கு தட்டு முட்டு சாமான்கள் சப்ளை செய்து கட்டணம் வசூம் செய்யும் உரிமத்திற்கு கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | 143) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது |

| வ.எண் | பெயர் | முந்தைய ஆண்டு குத்தகைத் தொகை ரூ. | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. சிம்சன்,<br>79 A,SPG கோவில் தெரு –3வது தெரு,<br>தூத்துக்குடி –2 | 19,85,603 | 22,83,900 |
| 2 | திரு. அன்புராஜ்,<br>37/1, திரவியபுரம் – 5வது தெரு,<br>தூத்துக்குடி | | 18,85,000 |

ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. சிம்சன் என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகைரூ.3,60,000 /– (மூன்று லட்சத்தி அறுபதாயிரம் மட்டும்) தமிழ்நாடு மொர்கன்டல் வங்கி வரைவோலை எண் – 919365 நாள்– 12–07–2019 இணைத்து உரிமத் தொகை ரூ.25,01,000/– என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார்.

ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. அன்புராஜ், என்பவர் மேற்படி இனத்திற்குரிய முன் வைப்புத் தொகைரூ.3,60,000 /– (மூன்று லட்சத்தி அறுபதாயிரம் மட்டும்) தமிழ்நாடு மொர்கன்டல் வங்கி வரைவோலை எண் – 919364 நாள்– 12–07–2019 இணைத்து உரிமத் தொகை ரூ. 21,00,000/– என ஒப்பந்தப்புள்ளியில் தொகையினை குறிப்பிட்டு கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. சிம்சன், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது முந்தைய ஆண்டு தொகையினை விட அதிகம் என்பதால் இதனை மாமன்றம் ஏற்கலாம். திரு. அன்புராஜ், என்பவர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி குறைவு என்பதால் இதனை மாமன்றம் நிராகரிக்கலாம்.

ந.க.எண்.அ16/0029/2019

| | | |
|---|---|---|
| | 8)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் "சீர் மிகு நகரம்" 2018–2019 பணியில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் சோலார் மேற்கூரை (Solar Roof Top) அமைக்கும் பணிக்காக ரூ. 1,55,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 20.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நான்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம் வருமாறு.<br>1) M/s. Green Field Solar Solution Pvt. Ltd. Chennai -30<br>2)M/s. Sabari Electricals Chennai 53<br>3)M/s, Thejas Solar Chennai 39<br><br>4) M/s. ORB Energy Pvt. Ltd. Bangalore -22<br><br>மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறைகள் அன்றே திறக்கப்பட்டது கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றமைக்காக தொழில்நுட் கமிட்டியால் தீர்மானிக்கப்பட்டது.<br>1.M/s. Green Field Solar Solution Pvt. Ltd. Chennai -30<br>2. M/s. Sabari Electricals Chennai 53<br>3. M/s. ORB Energy Pvt. Ltd. Bangalore -22<br><br>இதனைத்தொடர்ந்து தொழில்நுட்ப தகுதி பெற்ற மேற்படி மூன்று நிறுவனங்களின் விலைப்புள்ளி உறைகள் 25.01.2019 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் வருமாறு.<br><br>1)M/s. Green Field Solar Solution Pvt. Ltd. Chennai -30<br>மதிப்பீட்டை விட 12.57% அதிகம்<br>(ரூ. 1,85,41,260.00) (1.2) | 144. அலுவலகக் குறிப்பு 1 அனுமதி வழங்கப்பட்டது அலுவலகக் குறிப்பு 2 பதிவு செய்யப்பட்டது அலுவலகக் குறிப்பு 3 ஒப்புதல் வழங்கப்பட்டது. |

2) M/s. Sabari Electricals Chennai 53
மதிப்பீட்டை விட 33.90% அதிகம்
(ரூ.1,87,11,882.00) (1.3)

3) M/s. ORB Energy Pvt. Ltd. Bangalore -22
மதிப்பீட்டை விட 06.35% அதிகம்
(ரூ.1,51,78,250.00) (L1)

மேற்படி மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s. ORB Energy Pvt. Ltd. Bangalore -22 என்ற L1 நிறுவனத்தாரிடம் விலைக்குறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டது. அதற்கு கீழ்க்கண்டவாறு விலைக்குறைப்பு செய்து வழங்கப்பட்டது.

M/s. ORB Energy Pvt. Ltd. Bangalore -22
மதிப்பீட்டை விட 2.28% அதிகம்
(ரூ.1,46,91,650.00)

இந்நிலையில் பொறியர் கையோடு பிரிவு II விதி எண். 2.7–2ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத் தொகையினை விட கூடுதலாக 5 % வரை உள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிதித்தினை அனுமதிக்க மாமன்றத்திற்கு அதிகாரம் வழங்கியுள்ளது. எனவே அதனடிப்படையில் மேற்படி L1 ஒப்பந்தப்புள்ளியின் தொகையானது மதிப்பிட்டுத் தொகையினை விட 2.28% (ரூ.1,46,91,650.00) மட்டுமே அதிகமாக உள்ளதால் M/s. ORB Energy Pvt. Ltd. Bangalore -22 நிறுவனத்தாரின் L1 ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசர அவசியம் கருதி ஏற்று ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) திட்டப்பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டை விட 2.28% அதிகமான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள 1.1 நிறுவனமான M/s. ORB Energy Pvt. Ltd. Bangalore -22 ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இப்பணிக்கு ''சீர் மிகு நகரம்'' திட்ட நிதியிலிருந்து தொகை ரூ. 155.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாமன்றம் பதிவு செய்யலாம்.
3) இப்பணியில் ஏற்படும் கூடுதல் செலவினத்தை ''சீர் மிகு நகரம்'' திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள். 31.07.2019